<u>அ.வ.எண்.**111/2023** வா.சா.**1 –** தங்கராசு **16.07.2025**</u>

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

பிரதிவாதி என் உறவினர். எனக்கு விவசாயம் மற்றும் பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் வட்டிக்குவிடும் தொழில் செய்வதில்லை. நான் பள்ளிகவுண்டனுாரை சேர்ந்தவர். பிரதிவாதி சின்னப்பிள்ளுார் ஊரை சார்ந்தவர். தாவாசொத்து சின்னப்பிள்ளுார் கிராமத்தில் உள்ளது. உங்கள் ஊருக்கும், தாவாச்சொத்து அமைந்துள்ள இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 10 கி.மீ., தொலைவு இருக்கும். மேற்படி கிரையப்பத்திரம் கிரையத்தொகையை ஒரு வாரத்திற்கு முன்பாக பேசி பின்னிட்டு 21.02.2020 ல் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டோம். பிரதிவாதி எந்த காலத்திலும் உங்களிடம் ரூ.8,00,000/- ரூபாய் வாங்கவில்லை என்றும், பத்திரம் எழுதுவதற்கு முன்பாக ரூ.2,00,000/- மட்டுமே வட்டிக்காக கடன் பெற்றிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் 2,00,000/- வட்டி பணத்திற்காக கிரைய ஒப்பந்த பத்திரம் ரூ.8,00,000/- க்கு எழுதி கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சாட்சிகளை விசாரித்தால் 21.02.2020 அன்று ரூ.8,00,000/- கொடுத்த விபரம் தெரியவரும் என்றால் சரிதான். 21.02.2020 அன்று மேற்சொன்ன கிரைய

ஒப்பந்த ஆவணம் எழுதிக்கொண்ட பின்புதான் ரூ.3,00,000/- பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை கிரைய ஒப்பந்த ஆவணம் செய்வதற்கு முன்பாகவே பெற்றக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்த அன்று பிரதிவாதியிடம் ஒரு புரோநோட்டும், பிரதிவாதியின் தகப்பனாரிடம் ஒரு புரோநோட்டும் உங்கள் பெயரில் எழுதி வாங்கிக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ரூ.8,25,000/- க்கு கிரையம் பேசிய நிலையில் ரூ.8,00,000/- கொடுத்ததாக சொல்லப்படும் சொற்பகாசு ரூ.25,000/- பணம் கொடுக்க மூன்று வருட காலம் எதற்கு தேவைப்பட்டது என்றால் நிலம் பிரதிவாதி தனிப்பட்டு இல்லாமல் கூட்டாக இருந்ததால் அதுதனித்து தரும்படி கேட்டதால் மூன்று வருட காலம் தேவைப்பட்டது. பிரதிவாதியின் தகப்பனார் மற்றும் துறை என்பவர் பெயரில் தாவாசொத்து கூட்டாக இருந்தது, அதனால் கிரையப்பத்திரம் எழுத முடியவில்லை. கூட்டு பட்டாவாக இருந்த நிலத்தை பிரதிவாதியிடம் கிரையம் வாங்க முடியாது என்ற விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் கிரைய ஒப்பந்தம் செய்த அன்று தெரியாது. சுவாதீனம் எங்களிடம் இல்லை, பிரதிவாதியிடம்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கிரையம் கொடுக்கவில்லை என்றால் அதன் வட்டிதொகை

கொடுக்கவேண்டும் என்பது பற்றி குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி 2019 ஆம் ஆண்டு ரூ.2,00,000/- உங்களிடம் இருந்து பெற்றுக்கொண்டார் என்றும், அந்த தொகைக்கு மாதா மாதா 2002 ஆம் ஆண்டு வரை வட்டித்தொகை கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. உங்களிடம் பிரதிவாதி செலுத்திய பணத்திற்காக பிரதிவாதியின் தகப்பனாரிடம் இரசீது உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி உங்களிடம் கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பு ரூ.2,00,000/- கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பு ரூ.3,00,000/- ஆக ரூ.5,00,000/- கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. முத்துராஜ் என்பவருக்கு பணம் கொடுத்துள்ளீர்களா என்றால் எனக்கு பணம் கொடுக்கும் பழக்கம் இல்லை. பிரதிவாதியின் தகப்பனாருக்கு நீங்கள் வட்டிக்கு பணம் கொடுத்துள்ளீர்கள் என்றும், அதற்காகதான் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த அறிவிப்புக்கு தவறான சங்கதிகள்கூறி பிரதிவாதி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார். ரூ.5,00,000/- கொடுக்கவேண்டிய காரணத்தினால் பிரதிவாதியை நீங்கள் மிரட்டி கிரைய ஒப்பந்தம் எழுதி கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தம் கிரையம் கொடுப்பதற்கு விருப்பம் இல்லையென்றும், நீங்கள் மிரட்டியதால்தான் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய ரூ.5,00,000/- அதற்குரிய

வட்டி கொடுக்க தயாராக உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் என் கைவசம் இல்லை. பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பிரதிவாதி கொடுத்த நிரப்பப்படாத புரோநோட் ஒன்றும் மற்றும் அதேபோல் பிரதிவாதியின் தந்தை கொடுத்த புரோநோட் ஒன்றும் உங்களிடம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கொடுத்த தொகையைவிட அதிகமாக கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.